
இயேசு
யார்?
E. சுரேஷ் தாமஸ்

WORD UNPACKED

YouTube : WORD UNPACKED

Instagram : WORD UNPACKED

LIKE SHARE SUBSCRIBE

www.whoisjesus.faith



# இயேசு யார்?

*E. சுரேஷ் தாமஸ்*

# பொருளடக்கம்


முன்னுரை: இயேசு யார்? ....................................................................................................1

அத்தியாயம் ஒன்று: அவருடைய பிறப்பும் அதற்கு முன் இருந்த அவருடைய நிலையும் .............. 3

அத்தியாயம் இரண்டு: அவருடைய பாவமற்ற வாழ்க்கை.........................................................25

அத்தியாயம் மூன்று: அவருடைய போதனைகள்...........................................................................37

அத்தியாயம் நான்கு: அவருடைய அற்புதங்கள்............................................................................53

அத்தியாயம் ஐந்து : அவருடைய மரணம் ....................................................................................77

அத்தியாயம் ஆறு : அவருடைய உயிர்த்தெழுதல் .......................................................................95

அத்தியாயம் ஏழு : அவருடைய இரண்டாம் வருகை .................................................................109

முடிவுரை : எனது மறுமொழி.........................................................................................127

*முன்னுரை*

# இயேசு யார்?

உலகத்தின் படைப்பு தொடங்கி காலங்களின் முடிவு வரைக்கும் சம்பவிக்கிறவைகளைப் பற்றிய விபரங்களை பதிவிட்டுள்ள ஒரு வரலாற்று புத்தகமே பரிசுத்த வேதாகமம் ஆகும்.

பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்ற வாக்கியத்துடன் தொடங்குகிறது. தேவன் நித்தியமானவர், சர்வ வல்லவர், எங்கும் இருப்பவர், சகலமும் அறிந்தவர் ஆவார். சகலத்தையும் தமது வாயின் வார்த்தையினால் படைத்தார்.

நம்மைச் சுற்றிலும் உள்ள நாம் காண்கிறவைகளையெல்லாம் தேவன் எவ்வாறு உண்டாக்கினார் என்பதையும் நாம் தொடர்ச்சியாக வாசிக்கிறோம். புல் பூண்டுகளையும், மரங்களையும், மீன்கள், விலங்குகள், மிருகங்கள், ஆகாயத்துப் பறவைகள் மற்றும் பூமியிலுள்ள எல்லாவற்றையும் அவர் சிருஷ்டித்தார். இந்தப் படைப்பு பற்றிய அனைத்து விபரங்களையும் ஆதியாகமப் புத்தகம் நமக்குத் தருகின்றது. படைப்பின் மூலகாரணராகிய தேவன் மனிதனைப் படைப்பதற்கு முன்பே மனிதகுலம் வாழ்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் ஏற்படுத்தி வைத்தார். நிறைவாக அவர் மனிதனைத் தமது சாயலாகவும் ரூபமாகவும் ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்களை ஏதேன் என்றழைக்கப்பட்ட தோட்டத்தில் வைத்தார். பலுகிப் பெருகும்படி அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவருடைய படைப்புக்கள் அனைத்தின் மேலும் ஆளுகை செய்யவும் தோட்டத்தைப் பண்படுத்திக் காக்கவும் வேண்டுமென அவர்களிடம் கூறினார்.

தோட்டத்திலிருக்கிற அனைத்து மரங்களின் கனியையும் சாப்பிடுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், "நன்மை தீமை அறியக்கூடிய விருட்சத்தின் கனியை" சாப்பிட அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அந்த மரத்தின் கனியை சாப்பிடுவதால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் பற்றி அவர்கள் எச்சரிக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த மரத்திலிருந்து சாப்பிடும் நாளில் அவர்கள் சாவார்கள் என அவர்களுக்குக் கூறப்பட்டது. பாம்பின் உருவத்தில் தோன்றிய, விழுந்துபோன தூதனாகிய சாத்தானால் ஏவாள் சோதிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டாள். ஏவாள் அந்தப் பழத்தைச் சாப்பிட்டதுமல்லாமல் தன்னுடைய கணவராகிய ஆதாமுக்கும் அதைப் பகிர்ந்து கொடுத்தாள்.

வேதாகமம் கூறுகிறபடி பாவம் என்கிற அந்தக் கீழ்ப்படியாமையின் விளைவாக மரணம் வந்தது. மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து போவதையும், மனுக்குலம் முழுமைக்கும் பரவியுள்ள சரீர மரணத்தையும் குறிப்பிடுகிறது. தேவனுடைய அற்புதமான சிருஷ்டிப்பை கெடுக்கும் தனது திட்டத்தில் தேவனுடைய எதிரியாகிய சாத்தான் தற்காலிகமாக வெற்றியை அனுபவித்தான். பாவம் இவ்வளவு மோசமான விளைவை ஏற்படுத்தினாலும் தேவன் இரட்சகரை வாக்குப்பண்ணினார்.

ஆதியாகமம் 3:15 -ல் “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிகாலை நசுக்குவாய்” என தேவன் கூறுகிறார். ஒரு பெண்ணிடத்தில் மேசியா (அபிஷேகம்பண்ணப்பட்டவர்) பிறந்து, பாம்பினுடைய தலையை ஒரு நாள் நசுக்குவார். வேறோரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், மனிதனுடைய வீழ்ச்சியின் நிமித்தமாக சாத்தானையும், சாத்தான் அடைந்த எல்லாவற்றையும் அவர் அழிப்பார்.

“தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16) என்று வேதாகமம் கூறுகிறது. இந்த தேவன் மூன்று ஆள்தத்துவமுள்ளவராய் நித்தியமாக இருக்கிறார் என வேதாகமம் வெளிப்படுத்துகிறது. பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன். தேவனுடைய குமாரனாகிய இயேசு 2000 ஆண்டுகளுக்கு முன்னால் இஸ்ரவேல் என்னும் நாட்டில் பிறந்தார்.

இயேசு கிறிஸ்துவின் தனித்தன்மையைப் பற்றி பலர் ஆராய முயற்சி செய்து அவருடைய வாழ்க்கையைப் பற்றி கணக்கில்லாத அளவில் புத்தகங்களை எழுதியுள்ளனர். இயேசுவைப் பற்றிய பல கருத்துக்களை வேதாகமம் கூறுவதோடு, அவருடைய வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்த பல ஆதாரங்களையும் கொடுக்கிறது. அவற்றைத் தள்ளிவிடவோ அல்லது எளிதாக எடுத்துக்கொள்ளவோ முடியாது. இயேசு கிறிஸ்து யார் என்பது பற்றியும் அவர் என்ன செய்கிறார் என்பது பற்றியும் நாம் புரிந்துகொள்ளும் பொழுது, அது நம்முடைய முடிவினை மாற்றுகிறது.

பரிசுத்த வேதாகமத்தை தனிப்பட்ட முறையில் நீங்களே ஆராய்ந்து, ஒரு முடிவுக்கு நீங்களே வரவேண்டும் என்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

நாமாகவே சத்தியத்தை அறிய வேண்டும். அப்பொழுது சத்தியம் நம்மை விடுதலையாக்கும்.

*அத்தியாயம் ஒன்று*

# அவருடைய பிறப்பும் அதற்கு முன் இருந்த அவருடைய நிலையும்

இலட்சக்கணக்கான மக்கள் இந்த பூமியில் பிறந்து இறக்கிறார்கள். ஒருவருடைய பிறப்பைத் தனித்தன்மையாக்குவது எது? ஒருவர் தனது பிறப்பின் நேரம், இடம் அல்லது குடும்பத்தை தீர்மானிக்க முடியுமா? வேதாகமம் கூறுகிறபடி, இயேசுகிறிஸ்துவின் பிறப்பையும் அவருடைய துவக்கத்தையும் ஆராய்ந்து, எந்த விதங்களில் எல்லாம் அவர் நம்மைக் காட்டிலும் வேறுபட்டவராக இருக்கிறார் என்பதை இந்த அத்தியாயத்தில் நாம் காண இருக்கிறோம்.

**உட்கருத்து:** *இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஏசாயா என்பவரின் புத்தகமானது, யூதர்களின் வேதாகம எழுத்துக்களில் மிகப் பழமையான புத்தகமாகும். வரப்போகிற மேசியாவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம், அடக்கம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றி தீர்க்கதரிசியாகிய ஏசாயா இப்புத்தகத்தில் முன்னறிவித்து எழுதியிருக்கிறார்.*

## கண்டறியுங்கள்:

ஏசாயா 7:14 & 9:6-7 ஆகிய வசனங்களை வாசிப்போம்.

- **வரப்போகிற மேசியா** பற்றிய அனைத்துக் குறிப்புக்களையும், **குமாரன்** மற்றும் **பாலகன்** ஆகிய வார்த்தைகளையும் சிலுவை குறியினால் அடையாளமிடுங்கள். † வேதாகம வசனங்களை வித்தியாசப்படுத்தி அடையாளமிடுவது முக்கிய வார்த்தைகளின்மேல் கவனம் செலுத்தவும் பொறுமையாகக் கற்கவும் உதவியாக இருக்கும்.

## ஏசாயா 7:14

14. ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். (குறிப்பு: இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடு இருக்கிறார் எனப் பொருளாகும்)

## ஏசாயா 9:6–7

6. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்.

7. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.

மீண்டும் ஒரு முறை ஏசாயா 9:6–7ஐ வாசித்து, இப்பொழுது...

- **கர்த்தத்துவம், சிங்காசனம், ராஜ்யம்** ஆகிய வார்த்தைகளையும் அவற்றின் பிரதிப் பெயர்ச்சொற்களையும் கிரீடம் வரைந்து அடையாளமிடுங்கள்.
- காலத்தைக் குறிப்பிடுகின்ற **நித்திய, முடிவில்லை** மற்றும் **என்றென்றைக்கும்** போன்ற வார்த்தைகளை வட்டமிடுங்கள்.

## நீங்கள் தனியாக சிந்தித்தோ அல்லது குழுவாக கலந்துரையாடியோ உங்களுடைய பதிலை எழுதுங்கள்:

- கன்னிகைக்கு பிறக்கப்போகிற குமாரனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களும் பட்டங்களும் என்னென்ன?

- ஏசாயா 9 -ம் அதிகாரத்தில் அவருடைய கர்த்தத்துவம் மற்றும் ராஜ்யம் குறித்து விவரிக்க என்னென்ன சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன?

- இது எவ்வாறு நிறைவேறும்? (ஏசாயா 9:7ஐ வாசிக்கவும்)



## கண்டறியுங்கள்:

இயேசுவின் முற்பிதாவாகிய அரசன் தாவீதிடம், அவனுடைய ராஜ்யம் நித்தியமானது என்றும், அதற்கு முடிவில்லை என்றும் தேவன் வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார் (2 சாமுவேல் 7:12-17).

ஏசாயாவில் நாம் வாசிக்கிறபடி கன்னிகைக்குப் பிறக்கும் மேசியா தாவீதின் ராஜ்யத்தை என்றென்றைக்கும் ஆளுகை செய்வார்.

இப்பொழுது இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலைப் பற்றி வாசிக்க உள்ளோம். மரியாள் என்னும் கன்னிகையின் மூலமாக இயேசு பிறந்தார். புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்தி நூல் ஆசிரியர்களில் ஒருவரான லூக்கா என்பவர் இந்த சம்பவத்தை பதிவு செய்திருக்கிறார்.

லூக்கா 1: 26-35 மற்றும் லூக்கா 2: 1-11 வரை வாசிப்போம்.

- **இயேசுவைக்** குறிப்பிடுகிற அனைத்து குறிப்புகளையும், **குமாரன், பரிசுத்தமுள்ளது, கிறிஸ்து** மற்றும் **இரட்சகர்** ஆகிய சொற்களையும் சிலுவை அடையாளத்தால் குறிக்கவும். †

## லூக்கா 1:26-35

26 ஆறாம் மாதத்திலே காபிரியேல் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில்,

27 தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.

28 அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

29 அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

30 தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.

31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.

32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.

33. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

34. அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்.

35. தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.

### லூக்கா 2: 1–11

1. அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது.
2. சீரியாநாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று.
3. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும் படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.
4. அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி,
5. கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான்.
6. அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது.
7. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்த படியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்.
8. அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

9. அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

10. தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

11. இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

**மறுபடியும் ஒரு முறை லூக்கா 1:26–35, 2:1–11ஐ வாசித்து, இப்பொழுது…**

- **சிங்காசனம், அரசாளு** மற்றும் **ராஜ்யம்** ஆகிய வார்த்தைகளை கிரீடம் அடையாளத்தினால் குறியீடு செய்யவும். 
- **என்றென்றைக்கும், முடிவிராத** மற்றும் **இன்று** போன்றதான காலத்தைக் குறிப்பிடுகிற அனைத்து வார்த்தைகளையும் வட்டமிடுங்கள்.

**நீங்கள் தனியாக சிந்தித்தோ அல்லது குழுவாக கலந்துரையாடியோ உங்களுடைய பதிலை எழுதுங்கள்:**

- இயேசு என்ற பெயரை அடையாளமிட்டதினாலும் அதனை உற்று கவனித்ததினாலும் நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- அவருடைய ராஜ்யத்தின் எதிர்கால நோக்கம் குறித்து நீங்கள் கற்றது என்ன? காலத்தைப் பற்றிய குறிப்புக்களைச் சற்று கூர்ந்து கவனிக்கவும்.

- லூக்கா 1:34 -ன்படி மரியாளின் கவலை என்ன? அவளுடைய கவலைக்கு தேவதூதனுடைய பதில் என்ன?

- நம்முடன் இயேசுவை ஒப்பிடுகையில் அவர் எவ்வகையிலெல்லாம் தனித்தன்மை யுடையவராக இருக்கிறார்?

- நீங்கள் ஏற்கனவே வாசித்த ஏசாயா 7: 14 மற்றும் 9: 6-7 ஆகிய பகுதிகளில் உள்ள முன் உரைத்தல்களின் நிறைவேறுதல்களை கவனியுங்கள். எவையெல்லாம் நிறைவேறியுள்ளன? இன்னமும் நிறைவேற வேண்டியவைகள் எவைகள்?



இந்த மேசியாவைக் குறித்து வேத வாக்கியங்கள் என்ன கூறுகின்றன என தொடர்ந்து நாம் காண்போம்.

## கண்டறியுங்கள்:

யோவான் 1:1-3,14-17 மற்றும் கொலோசேயர் 1:13-17 வாசித்து ....

- இயேசுவைக் குறிப்பிடுகிற அனைத்துக் குறிப்புகளையும் **வார்த்தை, ஒரே பேறான** மற்றும் **குமாரன்** ஆகிய வார்த்தைகளை சிலுவைக் குறியீட்டால் அடையாளமிடுங்கள். †
- **ஆதியிலே, பின்வருகிற, முந்தின பேறான** மற்றும் **முன்னிருந்த** என்பன போன்ற காலத்தைக் குறிப்பிடுகிற வார்த்தைகளை வட்டமிடுங்கள்.

## யோவான் 1:1–3, 14–17

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

15. யோவான் அவரைக் குறித்துச் சாட்சிகொடுத்து: எனக்குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்.

16. அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.

17. எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.

## கொலோசெயர் 1:13–17

13. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

14. (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

15. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சூருபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

16. ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

17. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது.

## நீங்கள் தனியாக சிந்தித்தோ அல்லது குழுவாக கலந்துரையாடியோ உங்களுடைய பதிலை எழுதுங்கள்:

- இயேசுவைப் பற்றிய குறிப்புக்களை அடையாளமிட்டதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- யோவான் 1: 3 –ன்படி சகலத்திற்கும் சிருஷ்டி கர்த்தர் யார்?

- வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார் என யோவான் 1: 14 –ல் வாசிக்கிறோம். இது யாரைக் குறிப்பிடுகிறது?

- அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம் யார்?

- பரலோகத்திலுள்ளவைகளும் பூமியிலுள்ளவைகளும் எப்படி மற்றும் ஏன் சிருஷ்டிக்கப்பட்டன?

- கொலோசேயர் 1: 17 -ன்படி முழு உலகத்தையும் நிலைநிறுத்துவது யார்?

**உட்கருத்து:** *"முந்தின பேறுமானவர்" என்பது "முதலில் சிருஷ்டிக்கப்பட்டவர்" என அர்த்தமல்ல. இயேசு மாம்சத்தில் இருந்தபொழுது அவருடைய தெய்வீகத் தன்மை ஒருபோதும் சிருஷ்டிக்கப்பட்டதாக இருக்கவில்லை. யோவான் சொல்லுகிற வண்ணமாக அது "ஆதியிலே," "தேவனிடத்திலிருந்தது," மற்றும் "தேவனாயிருந்தது".*

பின்வரும் சம்பவத்தில் இயேசு யூதர்களுடன் பேசுகிறார். இயேசு பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்களுடைய முற்பிதாவாகிய ஆபிரகாம் வாழ்ந்து மரித்தார்.

## கண்டறியுங்கள்:

யோவான் 8:54-59 வரை வாசித்து ....

- ஆபிரகாம் பற்றிய ஒவ்வொரு குறிப்பையும் பெரிய **ஆ** எழுத்தால் அடையாளமிடுங்கள்.
- **இயேசுவைக்** குறிப்பிடுகிற அனைத்துக் குறிப்புகளையும் மற்றும் அதன் பிரதிப்பெயர்ச் சொற்களையும் சிலுவைக் குறியினால் அடையாளமிடுங்கள். †

## யோவான் 8:54–59

54. இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

55. ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப் போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை நான் அறிந்து, அவருடைய வார்த்தைகளைக் கைக்கொண்டிருக்கிறேன்.

56. உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.

57. அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.

58. அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

59. அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.

**உட்கருத்து:** *எரிகிற முட்செடியிலிருந்து மோசேக்கு தேவன் காட்சி கொடுத்த பொழுது, தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள தேவன் பயன்படுத்திய பெயர் "நான்" என்பதாகும். இஸ்ரவேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க தேவனால் பயன்படுத்தப்பட்ட மோசே, இயேசு கிறிஸ்துவுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் ஆவார். இயேசு தன்னை "நானே" என்று அறிமுகம் செய்யும்பொழுது, எரிகிற முட்செடியில் மோசேக்கு தரிசனமான தேவனோடு தன்னை அடையாளப்படுத்துகிறார்.*

**நீங்கள் தனியாக சிந்தித்தோ அல்லது குழுவாக கலந்துரையாடியோ உங்களுடைய பதிலை எழுதுங்கள்:**

- இந்த வசனங்களில் இயேசு தன்னை யாரெனக் கூறுகிறார்? தன்னைப் பற்றி அவர் வெளிப்படுத்துவது என்ன?

- இயேசுவின் கோரிக்கைகளை யூதர்கள் எவ்வாறு எதிர்த்தார்கள்?

- அவர்களுடைய எதிர்ப்புக்கு இயேசுவின் மறுமொழி எப்படியிருந்தது?

- வசனம் 59 -ன்படி, யூதர்கள் "அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொள்ள" அவர்களைத் தூண்டியது என்னவென்று நீங்கள் கருதுகிறீர்கள்?



## கண்டறியுங்கள்:

எபிரேயர் 1:1-3, 10 -12 வரை வாசித்து ....

- **இயேசுவைக்** குறிப்பிடுகிற அனைத்து இடங்களையும், **குமாரன்** மற்றும் **கர்த்தர்** எனக் குறிக்கப்படுகின்ற வார்த்தைகளையும் சிலுவை குறியினால் அடையாளமிடுங்கள். †
- பிதாவாகிய **தேவனைக்** குறிப்பிடுகிற அனைத்து இடங்களையும் அதற்குரிய பிரதிப் பெயர்ச்சொற்களையும் முக்கோண வடிவத்தால் அடையாளமிடுங்கள்.

## எபிரேயர் 1:1-3, 10-12

1. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,
2. இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.
3. இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.

10. **கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது;**
11. **அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழமையாய்ப்போம்;**
12. **ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவ தில்லை என்று சொல்லியிருக்கிறது.**

**நீங்கள் தனியாக சிந்தித்தோ அல்லது குழுவாக கலந்துரையாடியோ உங்களுடைய பதிலை எழுதுங்கள்:**

- பூர்வகாலங்களில் தேவன் முற்பிதாக்களிடம் எப்படிப் பேசினார்? இப்பொழுது நம்முடன் எப்படி பேசுகிறார்?

- இந்த வசனங்களிலிருந்து இயேசுவைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

- தேவன் உலகத்தைப் படைத்தபொழுது இயேசு எங்கே இருந்தார்?

- எல்லாவற்றையும் தாங்குவது யார்? எப்படி?

- இப்பொழுது இயேசு எங்கேயிருக்கிறார்?

- பூமியை அஸ்திபாரப்படுத்தியது யார்? யாருடைய கரத்தால் வானங்கள் உண்டாக்கப்பட்டன?

- பூமியையும் வானங்களையும் கர்த்தர் என்ன செய்வார்?



***உட்கருத்து:** "சுதந்தரவாளி" என்றால் ஒரு சொத்தின் சட்டப்பூர்வமான உரிமையாளர் அல்லது ஒரு பதவியில் முன்னிருந்தவரின் மரணத்திற்குப் பிறகு அப்பதவிக்கு வருவதற்கு தகுதியானவர் எனப் பொருளாகும். இங்கு எப்படியென்றால், இயேசுவின் மூலமாக எல்லாவற்றையும் தேவன் உண்டாக்கியதன் காரணத்தினால், அனைத்துக்கும் சுதந்தரவாளியாக அவரைத் தேவன் நியமித்தார். உண்மையாக தேவன் மரணமடைந்து தன்னுடைய சொத்துக்களை தமது குமாரனுக்கு விட்டுப் போகவில்லை. இயேசு தமது வார்த்தையின் வல்லமையினால் அனைத்தையும் நிலைநிறுத்துகிறார் என்றும், பாவங்களை நீக்கி சுத்திகரிப்பை ஏற்படுத்தினார் என்றும், பின்னர் பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்தார் என்றும் இந்த வசனங்கள் போதிக்கின்றன. பின் வரக்கூடிய அத்தியாயங்களில் இயேசுவின் ஆள்தத்துவம் மற்றும் அவருடைய செயல்களைப் பற்றி மேலும் கற்றுக்கொள்ள இருக்கிறோம்.*

## கண்டறியுங்கள்:

யோவான் 17:1-5 வரை வாசித்து அடையாளமிடுங்கள்....

- **இயேசுவைப்** பற்றிய அனைத்துக் குறிப்புக்களையும், **குமாரன்** என்ற வார்த்தையையும் சிலுவைக் குறியினால் அடையாளமிடுங்கள். †
- பிதாவாகிய **தேவன்** பற்றிய குறிப்புக்களையும் அவை சார்ந்த பிரதிப்பெயர்ச்சொற்களையும் முக்கோண வடிவத்தால் அடையாளமிடுங்கள்.

## யோவான் 17:1–5

1. இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:

2. பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

3. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

4. பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.

5. பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்.

**நீங்கள் தனியாக சிந்தித்தோ அல்லது குழுவாக கலந்துரையாடியோ உங்களுடைய பதிலை எழுதுங்கள்:**

- இந்த வசனங்களிலிருந்து இயேசுவைப் பற்றி நீங்கள் கற்றது என்ன?

- பிதாவாகிய தேவனைக் குறித்துக் கற்றுக்கொண்டது என்ன?

- வசனம் 2 -ல், இயேசுவானவர் கூறுகிறபடி அவரிடம் என்ன இருந்தது, அதனை யார் அவரிடம் கொடுத்தார்கள், அதனைக்கொண்டு அவர் என்ன செய்வார்?

- வசனம் 3 -ல், இதுதான் நித்தியஜீவன் என இயேசு கூறியது என்ன?

- வசனம் 5 –ல், இயேசு தம்மைப் பற்றி கூறுவது என்ன? இவையெல்லாம் இயேசுவைப் பற்றி நாம் முன்னர் படித்தவைகளோடு ஒத்துப்போகிறதை நீங்கள் காண்கிறீர்களா?

## சுருக்கமாக

இயேசு தேவனுடைய குமாரன் என்றும் அவர் இம்மானுவேல் (தேவன் நம்மோடு இருக்கிறார்) என அழைக்கப்பட்டார் என்றும் இந்த அத்தியாயத்தில் நாம் கண்டோம். எதிர்கால ஆளுகை இயேசுவின் தோளின் மேலிருக்கும் எனவும் கண்டோம். அவருடைய நாமம் ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு எனப்படும். இயேசுவின் ராஜ்யம் மற்றும் சமாதானத்தின் பெருக்கத்திற்கு முடிவில்லை. அவருடைய ராஜ்யம் நீதியும் நியாயமுமாக இருக்கும். அவர் பூமியை என்றென்றைக்கும் அரசாளுவார். மாம்சமாகிய வார்த்தை ஆதியிலே தேவனோடிருந்தது என்றும் அனைத்தும் அவர் மூலமாக உண்டானது என்றும் நாம் கண்டோம். அனைத்தும் என இங்கு நாம் குறிப்பிடுவது சிருஷ்டிக்கப்பட்ட எல்லாம் என்பதாகும். அவர் மகிமையுள்ளவரும் கிருபையும் சத்தியமும் நிறைந்தவருமாக இருக்கிறார்.

அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமாகவும், தேவனுடைய அனைத்துப் படைப்புக்களுக்கும் முந்தினவருமாக இயேசு இருக்கிறார். பரலோகத்திலும் பூமியிலும் காணக்கூடியதும் காண முடியாததுமாகிய அனைத்தும் இயேசுவின் மூலமாகவும் இயேசுவுக்காவும் சிருஷ்டிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் முந்தினவராயும், அனைத்து உலகங்களையும் தாங்குகிறவராயும் இருக்கிறார். வானங்களுக்கும் பூமிக்கும் அஸ்திபாரங்களை போட்டவர் இயேசு ஆவார். கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் மற்றும் பால்வெளி மண்டலங்கள் எல்லாம் அவருடைய கரத்தின் கிரியைகளாகும். மேலும் அவற்றையெல்லாம் அவர் ஒருநாள் சுருட்டிப்போடுவார். அவருடைய இரண்டாம் வருகை பற்றிய கடைசி அத்தியாயத்தில் இது குறித்து மேலும் நாம் வாசிக்க உள்ளோம்.

WORD UNPACKED